## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 137 / 2022**

**பி.வா.சா.1 – கந்தசாமி** **15.07.2025**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கை பற்றி முழு விபரம் எனக்கு நன்றாக தெரியும். இந்த வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் நான் என்ன எதிர்வாதம் செய்கிறேன் போன்ற விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். தாவா 1 முதல் 6 இலக்க சொத்துக்கள் வாதிகளின் தந்தையான உடையத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். உடையத்தேவர், சௌந்தரி ஆகியோருக்கு மொத்தம் 4 குழந்தைகள் என்று தெரியும் அவர்கள் சுபாஷ்சந்திரபோஸ், ரஞ்சனி, மீனாகுமாரி, சந்திரசேகர் என்ற சுந்தர் ஆவார்கள். உடையத்தேவர், சௌந்தரிக்கு கலைச்செல்வி என்ற மகள் உள்ளது எனக்கு தெரியாது. தாவா 1 முதல் 6 இலக்க சொத்துக்கள் உடையத்தேவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 வாதிகளுக்கும் தாவா சொத்தில் சம உரிமை உள்ளது என்றால் சரியல்ல, வாதிகள் சாலியேந்தல் கிராமத்திற்கு அவ்வப்போது வந்து செல்வார்கள். நான் எனது எதிர்வழக்குரையில் உடையத்தேவரின் மகனான சந்திரசேகரிடம் 2004ம் வருடம் ஏப்ரல் மாதம் ரூ.60000/– கொடுத்து தாவா சொத்துக்களை வெண்ணிலை பத்திரம் மூலம் ஒத்தி பெற்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஒத்தி பெற்றதை காட்டக்கூடிய மேற்படி ஒத்தி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஒத்தி ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் குழந்தைவேலு மற்றும் கள்ளத்தேவன் ஆகியோர்

சாட்சி கையொப்பம் போட்டார்கள். மேற்படி கள்ளத்தேவர் எனது உடன்பிறந்த தம்பி ஆவார் குழந்தைவேலு எனது உறவினர் அல்ல. குழந்தைவேலு எனது மைத்துனர் முறை வேண்டும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர் வழக்குரையிலும் மேற்படி குழந்தைவேலு மற்றும் கள்ளத்தேவன் ஒத்தி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த ஒத்தி பத்திரம் எவ்வளவு மதிப்பு என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் ஒத்தி பணம் ரூ.60000/- கொடுத்தது சந்திரசேகரனுக்கும், சந்திரபோசுக்கும், மீனாகுமாரிக்கும் தெரியும், மற்ற வாதிகளுக்கு தெரியாது. பொதுவாக பூர்வீக சொத்தை பொறுத்து ஆவணங்கள் ஏற்படுத்தும் போது அனைத்து வாரிசுகளிடமும் சம்மதம் பெற்று கையொப்பம் பெறவேண்டும் என்றால் சரிதான். நான் எந்த தேதியில் தாவா சொத்துக்களை ஜே.சி.பி மூலம் சீர்படுத்தினேன் என்று எனது எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ரூ.2,00,000/- ஜே.சி.பிக்கு செலுத்தியதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் வாதிகள் ரூ.2,00,000/- செலவழித்ததாக சொல்லியிருந்தால் அது தவறு. நான் பணம் செலவு செய்து தாவா சொத்துக்களை சீர்படுத்தவில்லை என்பதால் தான் செலவு செய்ததற்கான பில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை சந்திரசேகர் மற்றும் சுபாஷ்சந்திரன் ஆகியோரும் மற்ற வாதிகளும் எனக்கு கிரையம் கொடுப்பதாக எந்த தேதியில் உறுதியளித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதிகள் அதுபோல்

எந்த உறுதியும் அளிக்கவில்லை நான் வழக்கிற்காக உறுதி அளித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பயிர்காப்பீடு பெற்றதாக எனது நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் 1 வருடம் மட்டும் பயிர்காப்பீடு பெற்றேன். தாவா சொத்துக்கள் உடையத்தேவர் மற்றும் சௌந்தரிஅம்மாளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவர்களது வாரிசுகள் அனைவரிடமும் நான் ஒத்தி பெறாமல் ஒரு நபரிடமிருந்து மட்டும் ஒத்தி பெற்றதாக சொல்லியுள்ளதால் அது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. மேற்படி சந்திரசேகரும் எந்த காலத்திலும் தாவா சொத்துக்களை ஒத்தியாக எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது, நான் தாவா சொத்துக்களை அபகரிப்பதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை